# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, நவெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

*[2007 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச. வ. ஓ. 48/2007*

**எதிர்பாராதவையும் அவசரமானவையுமான சூழ்நிலைகளின் காரணமாக வட மாகாணத்திலுள்ள ஒரு மாநகர சபைக்கும் ஐந்து நகரசபைகளுக்கும் இருபத்தேழு பிரதேச சபைகளுக்கு மான தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ள அத்தகைய சபைகள் தொடர்பில் புதிதாக நியமனப்பத்திரங்களைக் கோருவதற்கும், தேர்தல்களை நடாத்துவதற்கும் ஏற்பாடுசெய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

*வட மாகாணத்திலுள்ள மாநகர சபை, நகர சபைகள் அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பிலும் நியமனப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும் என உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் வெளியிடப்பட்டதாதலாலும் :* *முன்னுரை.*

*மேற்சொல்லப்பட்ட உள்ளூரதிகாரசபைகளுள் மேற்சொல்லப் பட்ட மாநகர சபை, ஐந்து நகரசபைகள் மற்றும் இருபத்தேழு பிரதேச சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான வாக்கெடுப்புத் தேதி நிர்ணயிக்கப்பட்டு எதிர்பாராதவையும் அவசரமானவையுமான சூழ்நிலைகளின் காரணமாக உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகள் மூலம் காலத்திற்குக்காலம் பிற்போடப்பட்டுள்ளதாதலாலும் :*

*தங்கள் நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்கள் ஒன்றில் இறந்துள்ளனராதலாலும் அன்றேல் புலம்பெயர்ந்துள் ளாராதலாலும் அல்லது தங்கள் கட்சியை மாற்றியிருப்பதனாலும் அல்லது தங்கள் பெயர்குறித்த நியமனங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்களுள் கணிசமான நியமனங்களைச் சமர்ப்பித்துள்ள ஆட்கள் வெளிநாடு சென்றுள்ளனர் என்ற நிகழ்வின் காரணமாக அல்லது நியமனப்பத்திரங்களைச் சமர்ப்பித்த நேரத்தில் முப்பத்தைந்து வயதுக்குக் குறைவாயிருந்த ஆட்கள் இப்பொழுது முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களாயிருக்குமிடத்து மேற்சொல்லப்பட்ட மாநகரசபை, நகரசபைகள் மற்றும் பிரதேச சபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்கு ஏற்பாடுசெய்வது அவசியமாகியுள்ளது ஆதலாலும் :*

*மேற்கூறப்பட்ட மாநகரசபை அத்துடன் ஐந்து நகரசபைகள் மற்றும் இருபத்தேழு பிரதேசசபைகள் தொடர்பில் நியமனங்கள்*

2 –PL 002527– 1,400 (2007/10)

*சமர்ப்பிக்கப்பட்டதிலிருந்து காலப்பகுதி காலாவதியாகிவிட்டதன் காரணமாக, அத்தகைய மாநகரசபை, நகரசபைகள் அத்துடன் பிரதேசசபைகள் தொடர்பில் புதிதாக நியமனங்களைக் கோருவதற்கும், அத்தகைய சபைகள் மற்றும் பிரதேசசபைகள் தொடர்பில் புதிதாகத் தேர்தல்கள் நடாத்துவதற்கும் ஏற்பாடுசெய்தல் அவசியமாகியுள்ளதாதலாலும் :*

*ஆகவே, இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2007 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.*

*மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கும் பிரதேச சபைகளுக்குமான தேர்தல்கள் தொடர்பில் நியமனப் பத்திரங்கள் மற்றும் வைப்பீடுகள் தொடர்பான ஏற்பாடுகள்.*

***2.*** *(1) (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்களின் விளைசெயலாக இச்சட்டத்தின் அட்டவணைகள் I,II அத்துடன் III இல் முறையே குறித்துரைக்கப்பட்ட மாநகரசபை, நகரசபைகள் அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நியமனப்பத்திரங்கள் வலுவும் பயனும் அற்றதாகவும், அத்துடன் அத்தகைய நியமனப்பத்திரங்கள் ஒருபோதும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றாற்போன்றும் இத்தால் கருதப்படுகின்றது.*

*(2) இச்சட்டத்தின் அட்டவணைகள் I, II அத்துடன் III இல் முறையே குறித்துரைக்கப்பட்ட மாநகரசபைக்கான, நகரசபைகளுக்கான அத்துடன் பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் இத்தால் ஒழிக்கப்படுகின்றன.*

*(3) இச்சட்டத்தின் அட்டவணைகள் I, II அத்துடன் III இல் முறையே குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மாநகரசபைக்கான, நகரசபைகளுக்கான அல்லது பிரதேச சபைகளுக்கான தேர்தலுக்கென சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேட்பாளர்கள் தொடர்பில் முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட வைப்பீடுகள், முதன்மைச்*

சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவில் முரணாக எது எவ்வாறிருப்பினும், வைப்பீடு எவ்வாளினால் செய்யப்பட்டதோ அவ்வாள், முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வாளுக்கு வழங்கப்பட்ட பற்றுச்சீட்டைக் காண்பிப்பதன்மீது, வைப்பீட்டுத் தேதியில் இருந்து மீளளிக்கப்படும் தேதி வரையில் அத்தகைய வைப்பீட்டின் மீது ஆண்டொன்றுக்கு பன்னிரெண்டு சதவீதப்படியான வட்டியுடன் சேர்த்து அவ்வாளுக்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

தேர்தல்கள் நடத்துவதற்கான நடவடிக்கைகளைத் தொடங்குதல்.

**3.** இச்சட்டத்தின் அட்டவணைகள் I, II அத்துடன் III இல் முறையே குறித்துரைக்கப்பட்ட எவையேனும் மாநகரசபைக்கும் நகரசபைகளுக்கும் அத்துடன் பிரதேசசபைகளுக்குமான தேர்தல்களை நடாத்துவதற்கு முதன்மைச் சட்டவாக்கத்தின்கீழ் நடவடிக்கைகள் தொடங்கப்படுதல் வேண்டும் :

ஆயின், முதன்மைச் சட்டவாக்கத்தின் நியதிகளின்படி நியமனங்கள் பற்றிய அறிவித்தலானது, வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று வெளியிடப்படுதல் வேண்டும். அத்தேதி எவ்வாறாயினும், இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பிந்தாததாயிருத்தல் வேண்டும்.

புலம்பெயர்ந்துள்ள வாக்காளர்கள்.

**4.** (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எவ்விடப்பரப்பினுள் தனது வாக்கெடுப்பு நிலையம் அமைந்துள்ளதோ அவ்விடப்பரப்பில் நிலவுகின்ற நிலைமைகள் காரணமாக அவர் இச்சட்டத்தின் அட்டவணைகள் I,II அத்துடன் III என்பவற்றில் முறையே குறித்துரைக்கப்படக்கூடியவாறான மாநகர சபைக்கும் ஐந்து நகரசபைகளுக்கும், இருபத்தேழு பிரதேச சபை களுக்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஒன்றில், அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் சுதந்திரமாக தனது வாக்கை அளிக்க முடியாதுள்ளதென நியாயமாக அச்சமடைகின்ற எவரேனும் பதிவுசெய்யப்பட்ட தேருநர், நியமனப் பத்திரங்களின் அறிவித்தலிலிருந்து ஒரு வாரத்தினுள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அவரது தனித்தற்றுணிபில் ஆணையாளரினால் தீர்மானிக்கக்கூடியவாறான வேறொரு வாக்கெடுப்பு நிலையத்தில் அவர் தனது வாக்கை அளிக்க, தான் அனுமதிக்கப்படவேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்ற விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணையாளர், விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்ற திலிருந்து ஒரு வாரத்தினுள் அத்தகைய விண்ணப்பம் ஏற்கப்பட்டுள்ளதோ அல்லது நிராகரிக்கப்பட்டுள்ளதோ என அத்தகைய தேருநருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளரின் முடிபானது இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் நியதிகளின்படி செய்யப்பட்ட, பதிவுசெய்யப்பட்ட தேருநர் ஒருவரின் விண்ணப்பத்தை ஏற்றுக்கொள்ள ஆணையாளர் தீர்மானிப்பதன்மீது அத்தகைய தேருநர் எந்த வாக்கெடுப்பு நிலையத்தில் அவரது வாக்கை அளிக்கத் தகுதியுடையவராகின்றாரோ அந்த வாக்கெடுப்பு நிலையம்பற்றி அவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

(4) ஆணையாளர் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க எந்தப் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளனவோ அந்தப் பதிவுசெய்யப்பட்ட தேருநர்களின் பெயர்களின் நிரலொன்றை, தனது அலுவலகத்திலும் இயைபான மாவட்ட அலுவலகத்திலும் பார்வைக்குக் கிடைக்கக்கூடியதாக அதன் பிரதிகளைத் தயாரிப்பதன்மூலம் வெளியிடுவித்தல் வேண்டும்.

(5) அத்தகைய வாக்கு அளிக்கப்படுமிடத்து, அத்தகைய வாக்கு எந்த இயைபான உள்ளூராட்சி அதிகாரசபையில் அத்தகைய தேருநர் பதிவுசெய்யப்பட்டுள்ளாரோ அந்த உள்ளூராட்சி அதிகாரசபையின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

## அட்டவணை I

### மாநகர சபைகள்

1. யாழ்ப்பாணம் மாநகரசபை

## அட்டவணை II

### நகரசபைகள்

1. வல்வெட்டித்துறை நகரசபை
2. பருத்தித்துறை நகரசபை
3. சாவகச்சேரி நகரசபை
4. வவுனியா நகரசபை
5. மன்னார் நகரசபை

## அட்டவணை III

### பிரதேச சபைகள்

1. காரைநகர் பிரதேசசபை
2. ஊர்காவற்றுறை பிரதேசசபை
3. நெடுந்தீவு பிரதேசசபை
4. வேலைணை பிரதேசசபை
5. வலிகாமம் (மேற்கு) பிரதேசசபை
6. வலிகாமம் (வடக்கு) பிரதேசசபை
7. வலிகாமம் (தென்மேற்கு) பிரதேசசபை
8. வலிகாமம் (தெற்கு) பிரதேசசபை
9. வலிகாமம் (கிழக்கு) பிரதேசசபை
10. வடமராட்சி (தென்மேற்கு) பிரதேசசபை
11. பருத்தித்துறை பிரதேசசபை
12. சாவகச்சேரி பிரதேசசபை
13. நல்லூர் பிரதேசசபை
14. பச்சிலைப்பள்ளி பிரதேசசபை
15. கரைச்சி பிரதேசசபை

16. பூநகரி பிரதேசசபை

17. மன்னார் பிரதேசசபை

18. நானாட்டான் பிரதேசசபை

19. முசலி பிரதேசசபை

20. மாந்தை மேற்கு பிரதேசசபை

21. வவுனியா வடக்கு பிரதேசசபை

22. வெங்கலச் செட்டிக்குளம் பிரதேசசபை

23. வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை

24. வவுனியா தெற்கு சிங்களம் பிரதேசசபை

25. மாந்தை கிழக்கு பிரதேசசபை

26. துணுக்காய் பிரதேசசபை

27. முஹூதுபடபற்று பிரதேசசபை

---

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*